**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 210/2022 P.W.1/L.W.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. விஜயகுமார் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. ராமசாமி | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 02.02.2026.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். 19.02.2021ம் தேதி பெரியகுளத்தின் கரை, இசக்கியம்மன் திருக்கோவிலில் தங்க டாலர், வெண்கல விளக்கு, வெண்கல கெண்டி, சூடகத்தட்டு, விளக்கு ஆகியவை திருட்டு போய்விட்டது. சம்பவமானது 20.02.2021ம் தேதி அன்று பூசாரி காலையில் கோவிலுக்குச் சென்றபோது பார்த்து என்னிடம் கூறியதின் பேரில் நான் கோவிலுக்குச் சென்றுப் பார்த்தேன். நான் சென்றுப்பார்த்தபோது கோவிலின் பூட்டு உடைக்கப்பட்டிருந்தது.

2. சம்பவம் சம்மந்தமாக நான் காவல்நிலையைத்தில் புகார் மனுக்கொடுத்தேன். நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். **மேற்படி புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. களவு போன பொருட்களை போலீசார் கிடைத்துவிட்டது என்று கூறியதின் பேரில் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து களவுப்போன பொருட்களை பெற்றுக்கொண்டேன். மேற்படி தடயப்பொருட்கள் (அயிட்டம் எண் 1 முதல் 4 வரை ) **அ.சாபொ. 1 முதல் 4 ஆக குறியீடு**

**செய்யப்படுகிறது) தங்க டாலர் - 1 அ.சா.பொ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**<u>2 முதல் 4 வரையான குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

பூசாரி சொல்லி தான் எனக்கு தகவல் தெரியும் என்றால் சரிதான்.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 210/2022 P.W. 2/L.W.7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. குமாரப்பெருமாள் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. முத்துசாமி | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 02.02.2026.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து எல்.ஐ.சியில் பணிச் செய்து வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை எனக்குத் தெரியாது. வழக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியிலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது இல்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசுத்தரப்பு சங்கதிகளிலிருந்து முற்றிலும் மாறுப்பட்ட சங்கதியை இந்நீதிமன்றத்தில் சாட்சியமளித்திருப்பதால் மேற்படி தனது தரப்பு சாட்சியை நீதியின் நலன் கருதி குறுக்குவிசாரணை செய்ய கேட்கிறார். இந்நீதிமன்றம் வழக்கின் தன்மை கருதி இந்திய சாட்சிய சட்டம் 1872 பிரிவு 154-ன் கீழ் அனுமதிக்கிறது.**

**அரசுத்தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 04.09.2021ம் தேதி 14.00 மணிக்கு காவல் உதவி ஆய்வாளர் குற்றம் சுமத்தப்பட்ட நபரான அனிஷ்ராஜன் என்பவரை விசாரித்தபோது அவர் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை என் முன்னிலையிலும், முத்துராமன் என்பவர் முன்னிலையிலும் பதிவுச் செய்தார்கள் என்றும், அதனடிப்படையில் அத்தாட்சி தயார் செய்தார்கள் என்றும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியிலும் நான் கையொப்பம் செய்தேன் என்று கூறிவிட்டு தற்போது

தற்சமயம் நான் வழக்கின் உண்மை நிலையை மறைத்து எனக்கே தெரிந்த காரணத்திற்காக உண்மை சங்கதியை மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை</u>** :

இல்லை .

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.